# 5

# ஆடலும் பாடலும்



அரியலூர்க் குளத்திலேதான் – கண்ணே
அயிரை மீனு ஆயிரமாம்

அயிரை மீன் பிடிக்கப் போய் – கண்ணே உன்
அப்பன் இப்போ வந்திட்டாரே!

அயிரை மீனும் ஆரல் மீனும் – கண்ணே
அம்புட்டுதாம் அப்பனுக்கு

வாளைமீனும் வழலைமீனும் – கண்ணே
விதவிதமா அம்புட்டுச்சாம்!

அரண்மனைக்கு ஆயிரமாம் – கண்ணே உன்
அப்பனுக்கு ஆயிரமாம்!

ஆயிரமும் கொண்டு போய் – கண்ணே உன்
அப்பன் விற்று வீடுவர

அண்டை வீடும் அடுத்த வீடும் – கண்ணே
ஆச்சரியப்பட்டார்களாம்!



**– நாட்டுப்புறப் பாடல்**

**தொகுப்பு : கவிஞர் மா. வரதராஜன்**

- பாடலைக் குழுவாகவும் தனித்தனியாகவும் வாசியுங்கள். இனிய மெட்டமைத்துப் பாடுங்கள்.
- இந்த நாட்டுப்புறப் பாடல் எந்த நிகழ்வைப் பற்றிக் கூறுகிறது?
- இதுபோன்ற வேறு பாடல்கள் உங்களுக்குத் தெரியுமா? பாடிக்காட்டுங்கள்.

# மருதுபாண்டியர்

### ***கதைச் சுருக்கம்***

மருதுபாண்டியர் இருவர் ஆவர். மூத்தவர் பெரிய மருது, இளையவர் சின்ன மருது. இவர்கள் கல்வியிலும், வீரத்திலும் வல்லவர்கள். பெரிய மருது சிவகங்கைச் சீமைக்கு மன்னராகவும், சின்ன மருது அவரது அமைச்சராகவும் இருந்தனர். ஒன்றே குலம் ஒருவனே தேவன், எல்லோரும் ஓரினம், எம்மதமும் சம்மதம் என்ற பரந்த மனப்பான்மையோடு அவர்கள் ஆட்சி செய்தனர். பாஞ்சாலங்குறிச்சி மன்னர் கட்டபொம்மனையும், அவனது தம்பி ஊமைத்துரையையும் உடன்பிறந்தவர்களாய் மதித்து, வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தனர். இறுதியில் அவர்கள் வீரமரணம் அடைந்தனர். மருது சகோதரர்களின் வீரத்தை எடுத்துரைக்கும் போர்க்களக் காட்சியின் ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.

எங்களை நம்பிச் சரண் புகுந்தோர் அவர்
யாராயிருந்தாலும் துரோகம் செய்யோம்!
உங்களால் ஆனதைச் செய்யுங்கள் உங்களுக்கு
ஒன்றும் இளைத்தவர் அல்ல நாங்கள்!



என்று மருது சகோதரர்கள் சொல்ல
இடியுண்ட விட பாம்புகள் போல்
நன்றுகாண் உம்மை ஒருகை பார்க்காவிடில்
நாங்களும் கும்பினி யார்கள் அல்ல!

சென்றவர் பட்டாளத்தோடு வந்து என்ன
செய்தி கட்டபொம்மன் ஊமையனை
இன்றெங்கள் கையிலே ஒப்படைத்தால் நன்று
இல்லை என்றால் அது நல்லதில்லை!

என்று பொருமினர் கும்பினியார் இடி
யேறுபோல் மன்னன் கொதித்தெழுந்து
நன்றுநன்று! இங்கு பிழைக்கவந்தார்க்கிந்த
நாடகமா? சண்டை நாளைக் கென்றான்!

அப்படியே சண்டை ஆரம்ப மானது
அண்டம் அதிர்ந்திடப் பீரங்கிகள்
துப்பாக்கி வேட்டுப் புகைப்படலம் எங்கும்
சூழப் பறங்கியர் போர் தொடுத்தார்!

கண்டனர் பாண்டியர்! தங்கள் சேனைக்குக்
கைஜாடை காட்டியே கண்ணடித்தார்!
மண்டல மெங்கனும் ரத்தவெள்ளம் ஓட
மாண்டன வெள்ளையர் கும்பல்களே!

தங்கள் பட்டாளம் அழியக்கண்டு வேறு
சண்டைப் பட்டாளங்கள் கொண்டு வந்து
பங்கப் படுத்துவோம்! பாண்டியரே உங்கள்
பாச்சா பலிக்காது என்று சொல்லி

குண்டுகளைச் சரமாரியா வீசிக்
கொக்கரித்தார் அந்தக் கும்பினியார்!
மங்கும் புகைக்கிடை நின்று யுத்தம்செய்ய
மாட்டாமல் பாண்டியர் கோட்டைக்குள்ளே

தங்கியிருந்தங்கு வந்திடும் வெள்ளையர்
தலைகள் சக்கரம் போல்சுழன்று
அங்கினும் இங்கினும் எங்கணும் அருள
ஆயிரக் கணக்கில் வீழ்த்தி விட்டார்!

சிங்கத்தைப் போலவே அங்குமிங்கும் தாவிச்
சின்னமருது அந்த வெள்ளையரைப்
பங்கப் படுத்தினான்! ஆயிர மாயிரம்
பட்டாளம் ஜீவனை விட்டதம்மா!



**வீரத் தமிழ்ப்படை வீறுகொண்டு வந்த**
**வெள்ளைப் படைகளை வென்றதம்மா!**

**தொகுப்பு : எஸ்.லீலா**

## செயல்பாடுகள்

- கதைப்பாடலை வாசியுங்கள். தகுந்த இசையமைத்துப் பாடுங்கள்.
- இப்பாடலில் வீரத்தைக் குறிப்பிடும் வரிகளை எழுதுங்கள்.
- பாடலைக் கதைவடிவில் எழுதுங்கள்.
- ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த மருதுபாண்டியர் வரலாற்றைக் குறிப்பாக எழுதுங்கள்.
- நாட்டுப்புறக் கதைகள் ஏராளம் உள்ளன அல்லவா? உங்களுக்குத் தெரிந்த ஒரு கதையை எழுதி வாசியுங்கள்.

# வெற்றியின் இரகசியம்

கோடைக்காலத்தில் கூட வெயி ன் கொடுமை தெரியாத அடர்ந்த காடு மகாவனம். அந்தக் காட்டிலே இல்லாத மிருகங்களே இல்லை. மிருகங்களும் பறவைகளும் வண்டுகளும் பூச்சிகளும் ஏன் புழுக்களும் கூட மகிழ்ந்து வாழ்ந்தன. ஏனெனில், அந்தக் காட்டின் அரசனாக இருந்த பு அவற்றை அன்போடு பாதுகாத்து வந்தது.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. காட்டரசன் பு க்கு வயதாகித் தளர்ந்து மரணப்படுக்கையிலாகி விட்டது. அப்போது மற்ற மிருகங்களையெல்லாம் அது அழைத்தது.

“நீங்களே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்! காட்டரசனாகும் தகுதி வாய்ந்த மிருகம் எது என்பதைப் புத்திசா த்தனமாக முடிவு செய்யுங்கள்!” என அன்போடு கூறியது.



யானைதான் அந்தக் காட்டில் பலம் வாய்ந்த மலையைப் போலப் பெரிய மிருகம். அது தங்களை ஆளும் வ மை வாய்ந்ததாக இருக்கும் என எண்ணி யானையை அரசனாக்கிக் கொண்டன மிருகங்கள். ஆனால் அந்த யானையோ ஆணவம் கொண்டது; தீய குணங்களுடையது. பு இறந்த பின் அது பிற மிருகங்களுக்குத் தொல்லைகள் கொடுக்கத் தொடங்கியது. பாடிப் பறந்த பறவைகளும் வண்டுகளும் பூச்சிகளும் ஓடி ஒளிய பிற இடங்களைத் தேடித் திரிந்தன.

எறும்புகள் சாரைசாரையாகச் சென்று உணவுப்பொருட்களைத் திரட்டிப் பாதுகாத்திட உயரமாகப் புற்றுகளைக் கட்டும், ஒருநாள் அந்தப் புற்றுகளை யானை பார்த்து விட்டது.

புற்றுக்குள் எறும்புகள் போய் வருவதைப் பார்த்த யானை அலட்சியமாகச் சிரித்தது. அதன் சிரிப்பொ கேட்ட எறும்புகள் கதிகலங்கின.

“ஏய் எறும்புக்கூட்டமே! அற்பமான உங்களுக்குக் கோட்டை போல வீடா?’ கே செய்தது யானை. கூட்டமாகச் சாகப் போகிறோம் என எறும்புகள் பயந்தன.

“என் காலடி பட்டால் நீங்கள் பொடிப்பொடியாகி விடுவீர்கள். உங்களுக்கென்ன சுறு சுறுப்பு... என்னைப் பார்த்ததும் ஒடுங்கிக்கிடக்க வேண்டாமா...? அற்ப ஜந்துக்களே!...’’ என அலட்சியமாகப் பேசி ஆணவமாகச் சிரித்தது யானை. அது பலமிக்கதாயிற்றே எனக் கருதி எல்லா எறும்புகளும் பயந்து நடுங்கின.

ஒரே ஒரு சிற்றெறும்பு மட்டும் சற்றுத் துணிவோடு முன் வந்து யானையைப் பார்த்தது. அதற்குப் பயமிருந்தாலும் அதன் தன்மானம் தலைநிமிர்ந்து பேச வைத்தது.

“யானை அரசே! நாங்கள் அற்பமானவர்கள்தான்! ஆனால் எங்கள் சுறு சுறுப்பு இந்தக் காட்டில் வேறு யாருக்கும் வராது. நாங்கள் சோம்பேறியாகத் திரிவதில்லை; யாரையும் மிரட்டுவதில்லை; யாரையும் அழிப்பதுமில்லை. பலம் இல்லாத நாங்கள் பண்போடு வாழ்கிறோம்.. ஒரு பாவமும் செய்ததில்லை.’’ என அந்தச் சிற்றெறும்பு பேசப்பேச யானைக்குக் கோபம் தலைக் கேறிக்கொண்டிருந்தது.



“ஏய் பொடி எறும்பே! உன்னையும் உன் கூட்டத்தையும் ஒரே மிதியில் நாசமாக்கி விடுவேன் தெரியுமா? உங்கள் புற்றை மண்ணோடு மண்ணாக்கி விடுகிறேன். பார்க்கிறாயா?’’ என்று ஒரு காலைத் தூக்கியது.

“யானைப் பெருமானே! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான்! இந்தக் காட்டிலே உங்களுக்குள்ள பலம் வேறு யாருக்கும் இல்லை. நாங்கள் மிக மிகச் சிறிய உயிரினம். எங்களை அழிப்பது ஒரு வீரமா?’’ எனக் கூறியது சிற்றெறும்பு.

“பிறகு ஏன் நீ எனக்கு எதிராகப் பேசிக்கொண்டிருக்கிறாய்? ஓடிப் போய் விடுங்கள்! அற்ப உயிர்களே!”

யானையின் கோபத்துக்குப் பயந்து மற்ற எறும்புகள் எல்லாம் வேகமாக ஓடத் தொடங்கின. ஆனால் அந்தச் சிற்றெறும்பு மட்டும் அங்கேயே இருந்தது.

“எனது ஆட்சியில் இந்தக் காட்டில் இருக்கும் மிக மிகச் சிறிய நீ எனக்கு எதிராகப் பேசுவதா?” எனத் தும்பிக்கையைக் கோபத்தோடு அப்படியும் இப்ப டியும் ஆட்டியது.

விட்டால் போதும் என்று ஓடியே போய் விட்டது அந்தச் சிற்றெறும்பு.

“கேடு கெட்ட எறும்பு. பொடி மணலை விடவும் சிறிய பொடி எறும்பு” என வானை நோக்கித் தலையை உயர்த்திச் சிரித்தது யானை.

அப்போது அதே சிற்றெறும்பு தெளிவாகக் குரல் கொடுத்தது. “அரசே! பெரிய உருவம் இருப்பதால் உங்களுக்கு இவ்வளவு கர்வம் கூடாது. ஒரு வகையில் சிறிய உருவம் கொண்ட என்னோடு உங்களால் போட்டியிட முடியாது தெரியுமா?” எனக் கூறியது எறும்பு.

“அப்படியா? பார்க்கலாம்! அது என்ன போட்டி? அதில் நான் நொடியில் வெற்றிபெற்று உங்களை எல்லாம் அடித்துத் துவம்சம் செய்து விடுகிறேன் பார்! அற்ப உயிர்களே! என் ஆட்சியில் உங்களால் ஒரு நன்மையும் இல்லை. நீங்கள் மொத்தமாக ஒழிந்து போனாலும் ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை. போட் டிக்கு நான் தயார். என்ன போட்டி என்பதைச் சொல்!” என்று இறுமாப்போடு கூறியது யானை.

“பெரிய போட்டி ஒன்றுமில்லை. என்னோடு நீங்கள் ஓட்டப்பந்தயத்துக்கு வர வேண்டும்” என்று அடக்கமாகச் சொன்னது எறும்பு.

“உன்னோடா? ஓட்டப்பந்தயமா?” என்று கேட்டு அட்டகாசமாகச் சிரித் தது யானை.

“ எவ்வளவு தூரம்? நான் ஓர் அடி எடுத்து வைத்தால் அந்த இடத்துக்கு நீ வந்து சேரவே அதிகநேரம் ஆகுமே!” என்று மேலும் இடி இடிப்பதைப்போல் சிரித்தது யானை.

“சிரிப்பு வேண்டாம். ஓட்டப்பந்தயத்துக்குத் தயாராகுங்கள்! சரி புறப்படு வோம்!” என்றது சிற்றெறும்பு.

சரி! என்று யானையும் புறப்பட்டது. ஓர் அடி எடுத்து வைத்து யானை கீழே குனிந்து பார்த்தது. அதற்கு முன்னே எறும்பு ஓடிக்கொண்டிருந்தது.

யானைக்கு ஆத்திரம்; ஆவேசம்.... அத்தனையும் கலந்து வந்தன. வேக வேகமாக ஓடி, குனிந்து பார்த்தது. அதற்கு முன்னே எறும்பு ஓடிக்கொண்டிருந் தது.

மேலும் வேகமாக ஓடியது, பெரிய உடம்பைத் தூக்கிக்கொண்டு, கஷ்டப் பட்டு ஓடியது யானை. சற்று தூரம் போய்க் குனிந்து நோக்கினால் முன்னே எறும்பு ஓடிக்கொண்டிருந்தது.

“ ஆகா! உனக்கு இவ்வளவு வ மையா? எவ்வளவு சிறிய உடம்பு உனக்கு! இவ்வளவு சக்தியா? என் உடம்பைப் பார்! எனக்கு எவ்வளவு வ மை! இப் போதே உன்னை வெல்கிறேன்.” என்று கூறிக்கொண்டே மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடியது, அப்படியும் அதற்கு முன்னே ஓர் எறும்பு ஓடியது.

மூச்சிரைக்க மூச்சிரைக்க எவ்வளவு தூரம் ஓடினாலும் முன்னே எறும்பு!



“ஐயோ! நாம் தோற்றுவிடுவோம் போ ருக்கிறதே!” என்று துடித்துப் போனது யானை. உள்ளத்திலே வேதனை..! வெகு நேரம் வெகு தூரம் ஓடியதால் உட லே களைப்பு...! ஓர் அடி எடுத்து வைக்க முடியவில்லை. நின்று பார்த்தது. அப்போதும் எறும்பு முன்னே சென்று கொண்டிருந்தது.

“கேவலம். இந்தச் சின்ன எறும்பிடம் தோற்றுப் போனால்... அப்புறம் ராஜா என்று யார் மதிப்பார்கள். விட்டேனா பார்!...” என்று ஓட முடியாமல் ஓடியது. அந் தச் சிற்றெறும்பை வென்று, அதன் கூட்டத்தையே சிதைத்து விடுவது என்று சீற்றத்தோடு ஓடியது.

யானை படும் வேதனையை அறிந்த காட்டுமிருகங்களும் பறவைகளும் கூட்டம் கூட்டமாக வந்து ரசித்தன. யானைக்கு அவமானமாகிவிட்டது. மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடியது. அதன் முன்னால் எறும்பு போய்க்கொண்டே இருந்தது.

ஓடி ஓடி... கடைசியில் அந்த யானை ராஜா ஒரு பெரிய பள்ளத்தில் "தொபீர்'' என்று விழுந்தது அப்படியே உருண்டு அதல பாதாளத்துக்குச் சென்று விட்டது. அந்தப் பொல்லாத யானை ஒழிந்து விட்டதே என எல்லா மிருகங்களும் மகிழ்ச்சியோடு கொண்டாடின.

"நீ எப்படி அந்த யானையை வென்று விட்டாய்'' என எல்லா மிருகங்களும் கேட்டன. எறும்பு அடக்கமாக உண்மையைச் சொன்னது. "நான் எங்கே அந்த யானைக்கு முன்னே ஓடினேன். எறும்புகள் வரிசை வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. எங்கே போய்க் குனிந்து பார்த்தபோதும் எறும்பு முன்னே ஊர்ந்து செல்வதை அந்த யானையால் பார்க்க முடிந்தது. பார்த்த எறும்பெல்லாம் நான் என்றே எண்ணிவிட்டது. அக்கிரமம் ஒரு நாளைக்கு அழியத்தான் வேண்டும்!"

எல்லா மிருகங்களும் சிற்றெறும்பை உளமாரப் பாராட்டின.

### செயல்பாடுகள்

- இந்தக் கதையில் வரும் கதைப்பாத்திரங்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? காரணத்தைக் குறிப்பிடுங்கள்.
- மூச்சிரைக்க மூச்சிரைக்க, ஓடி ஓடி, சாரை சாரையாக போன்ற சொற்றொடர்களைத் திரட்டுங்கள். அவற்றைப் பயன்படுத்தி ஒரு எளிய கதை/ நிகழ்ச்சி எழுதுங்கள்.
- இது போன்ற மிருகங்கள் இடம்பெறும் கதை சொல்லுங்கள்; எழுதுங்கள். எல்லா மாணவர்களின் கதைகளையும் தொகுத்துச் சிறுகதை மலர் தயாரியுங்கள்.

## கண் கவரும் கலைகள்

கலையரசி அப்பாவுடன் அமர்ந்து தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

“பழம்பெரும் நாட்டுப்புறக் கலைஞர்களைப் பாராட்டி முதலமைச்சர் பரிசு களை வழங்கினார்.” தொலைக்காட்சியில் செய்தி ஒ த்தது. செய்திகள் முடிவ டைந்தபின் கலையரசி அப்பாவிடம்,



“நாட்டுப்புறக் கலைஞர்கள் என யாரைச் சொல்கிறார்கள்?” எனக் கேட் டாள்.

“நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்கள் தான் நாட்டுப்புறக் கலைஞர்கள். பல கலைகளுக்கும் முன்னோடியாக இருப்பதே நாட்டுப்புறக் கலை கள்தான்!”

“அந்தக் கலைகள் என்னென்ன? சொல்லுங்க அப்பா!”ஆர்வத்துடன் கேட்டாள் கலையரசி.

“காவடியாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், பொம்மலாட்டம், பாவைக்கூத்து போன்ற பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் உள்ளன.’’

அப்பா இவ்வாறு கூறிவரும்பொழுது கலையரசிக்கு ஒரு சந்தேகம்.

“அப்பா! இவ்வளவு கலைகள் உள்ளன! ஆனால் இப்போது இவற்றை யெல்லாம் பார்க்க முடியவில்லையே! ஒன்றிரண்டு கலைநிகழ்ச்சிகளை எப்போ தாவது தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள். ஏனிந்த நிலைமை?’’

நாட்டுப்புறக் கலைகள் பற்றி அப்பா பேசத் தொடங்கினார்.

“கிராமியக் கலைகள் ஜீவ கலைகள். இந்தக் கலைகளின் பிறப்பிடமே கிரா மங்கள் தான்! அந்தக் காலத்துப் பொம்மலாட்டமும் பாவைக்கூத்தும் தான் இன் றைய திரைப்படத்திற்கு முன்னோடி. கிராமமக்கள் கூட்டுணர்வுடன் பொழுது போக்கிற்காக இசைக்கருவிகளை இயக்கி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். பொதுவாக நாட்டுப்புற ஆட்டங்கள் குழு ஆட்டங்களாகவே காணப்பட்டன. பெரும்பா லும் நிலா வெளிச்சத்தில் மக்கள் ஒன்றாகக் கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்த காலம் அது! இன்று அந்தப் பழக்கவழக்கம் எல்லாம் மறைந்து விட்டது, கலையரசி!’’

உணர்ச்சியோடு பேசிய அப்பாவின் முகத்தில் கடந்த கால நினைவுகள் அலைமோதின.

“பெருமை மிக்க நாட்டுப்புறக் கலைகள் ந ந்து போக என்னப்பா கார ணம்?’’ எனக் கலையரசி கேட்டாள்.

“ தற்காலத்தில் திரைப்படம், கவர்ச்சி நடனங்கள் ,தொலைக்காட்சி போன்ற பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வந்துவிட்டன. பொது இடங்களுக்குச் சென்று கலைகளை ரசிக்கும் ஆர்வமும் குறைந்து விட்டது. நாட்டுப்புறக் கலை களை ஊக்குவிப்பாரும் இல்லை. இதனால் அவை மெல்ல மெல்ல மறையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.’’

“அப்பா! நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் குறித்துச் சொல்லுங்களேன்!’கலை யரசி ஆசையோடு கேட்டாள்.

“சரி! சில ஆட்டங்கள் பற்றிச் சொல்கிறேன், கும்மியாட்டம் மிகவும் உற்சாகமான பெண்களின் ஆடல். பள்ளி விழாக்கள், பண்டிகைகள் போன்ற காலங்களில் இந்த ஆட்டம் நடைபெறுவதை நீயும் பார்த்திருப்பாய்!”

“ஆமாம் ஆமாம்! எங்கள் பள்ளி ஆண்டு விழாவில் நானும் கும்மியாட்டத்தில் பங்கெடுத்துள்ளேன். வண்ண வண்ண உடை உடுத்தி அலங்காரம் செய்து கொண்டு ஆடினோம். வட்டமாக நின்று குத்துவிளக்கு முன்னே குனிந்து நிமிர்ந்து கை கொட்டிப் பாடி ஆடினோம்”.

கலையரசி மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் கூறினாள். அப்பா கும்மியாட்டம் பற்றி மேலும் சில செய்திகளைக் கூறத் தொடங்கினார்.

“முற்காலத்தில் மாலை நேரங்களில் வீட்டில் பெண்கள் கும்மியாடினர். பின்னர் அது பல வீட்டுப் பெண்களும் கூடி ஆடும் நிகழ்ச்சியாக மாறியது. சுவையான சில பாடல்களையும் பாடி ஆடுவர். ஒரு கும்மிப்பாட்டு சொல்கிறேன் கேள்!.



"சோளச் சோளக் காட்டிலே
சோளமடிக்கிற வீட்டிலே
பந்தடியே மீனாளே!
பதக்கு சோளம் நான் தாரேன்
சின்னச் சின்ன மூக்குத்தி
அத்தையிட்ட மூக்குத்தி
அரைப்பணத்து மூக்குத்தி
கண்டெடுத்த மூக்குத்தி
காப்பணத்து மூக்குத்தி''

இது போன்ற கும்மிப்பாடல்கள் உள்ளன.

"சுவையாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது அப்பா!.''

அப்பா மேலும் பேசத் தொடங்கினார்.

"கைகொட்டி ஆடுவதற்குப் பதிலாக வண்ணக்கோல்களைத் தட்டி ஒ யை எழுப்பிப் பாடி ஆடுவதே கோலாட்டம். ஒருவர் பாட்டுப்பாட பிறர் பின்பாட்டுப் பாடுவர்''

" அப்பா! மேலும் நாட்டுப்புறக் கலைகள் பற்றி அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது''

"அப்படியா? சரி சொல்கிறேன். பெரும்பாலும் கோயில் விழாக்களில் நடைபெறும் ஆட்டம் கரகாட்டம். நீயும் இந்த ஆட்டத்தைப் பார்த்திருப்பாயே!''

"ஆமாம்! தலையில் குடம் வைத்து ஆடும் ஆட்டம் தானே! நமது கோயில் திருவிழாவிலும் தொலைக்காட்சியிலும் பார்த்திருக்கிறேன்.''

அப்பா கரகாட்டம் பற்றி விளக்கினார்.

"கோயில் விழாக்களில் கரகத்தின் வாய்ப்பகுதியில் தேங்காய் வைத்து மாவிலைப் பூவும் வைத்து அலங்கரிப்பர். கரகம் முழுவதும் பூச்சரங்களை அடுக்கடுக்காகத், தொங்கவிடுவர்.'ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்கணும்' என்பது போல ஆட்டக்காரனின் கவனம் தலைமேல் உள்ள கரகத்தில் தான் இருக்கும். நீண்ட தலைமுடி இருந்தால் ஆடும்போது தலைமுடியும் குதித்

தாடும். அந்த அழகே தனி அழகு! கரகாட்டத்திலும் பக்திப்பாடல்களைப் பாடு வர், நையாண்டி மேளமும் முழங்கும்.'' ஒரு பாடலைப் பாடிக் காட்டுகிறார்.

"ஒன்றாம் கரகமம்மா
எங்கள் முத்து மாரியம்மா!
ஓடி வரும் பொன்கரகம்
எங்கள் குல தேவியம்மா!''

முதல் வரியில் வரும் "ஒன்றாம்'' என்பதை மாற்றி "இரண்டாம், மூன்றாம்...''. எனப் பத்து வரை சொல்  ப் பாடி ஆடுவர்.

"அப்பா எனக்குக் கரகாட்டம் ரொம்பப் பிடிக்கும், அது உள்ளத்தைக் கவ ரும் ஆட்டம் தான்! நாட்டுப்புறக் கலைகள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி அப்பா!''

"இந்தக் கலைகளைப் பார்த்து ரசிக்க வேண்டும். நமது முன்னோர்கள் உரு வாக்கிய இவற்றைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். அது நமது கடமை'' என அப்பா அறிவுரை கூறினார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள நாட்டுப்புறக்கலைகளில் நீங்கள் எவற்றைப் பார்த்துள்ளீர்கள்? எங்கு என்பதையும் குறிப்பிடுங்கள்.
- உங்களைக் கவர்ந்த நாட்டுப்புறக்கலை எது? ஏன்? காரணங்களுடன் எழு துங்கள்.
- "உணர்ச்சியோடு பேசிய அப்பாவின் முகத்தில் கடந்த கால நினைவுகள் அலை மோதின'' ஏன்? விரிவாக எழுதுங்கள்.
- நாட்டுப்புறக்கலைகளைப் பாதுகாக்க என்னென்ன செய்யலாம்? விவாதியுங்கள்; வெளியாகும் கருத்துகளைத் தொகுத்து வாசியுங்கள்.






### அ

அட்டகாசம் - ஆர்ப்பாட்டம்

அண்டை - பக்கம்

அண்டம் - உலகம்

அணிதல் - சூடுதல்

அந்தஸ்து - பெருமை

அந்தரம் - மேலே, வானத்தில்

அம்புட்டு - அவ்வளவு

அர்ப்பணித்தல் - சமர்ப்பித்தல்

அவதிப்படுதல் - வருந்துதல், துன்புறுதல்

அற்பம் - சிறியது

அன்னம் - சோறு, அன்னப்பறவை

### ஆ

ஆங்காங்கு - அங்கங்கே

ஆசிரமம் - முனிவர்கள் தங்கும் இடம்

ஆணவம் - அகங்காரம்

ஆணை - உத்தரவு

ஆத்திரம் - கோபம், வேகம்

ஆயத்தம் - தயாராகுதல்

ஆர்வம் - ஆசை, விருப்பம்

ஆவேசம் - வேகம்

ஆட்கொள்ளுதல் - ஏற்றுக்கொள்ளுதல்

### இ

இடர் - துன்பம்

இருக்கை - இருக்கும் இடம்

இளைத்து - மெலிந்து

இறுமாப்பு - தற்பெருமை

இன்னல் -துன்பம்

இனாம் -இலவசம்

## உ

உடன்பாடு - ஒப்புதல்

உளமார - மனமார

## எ

எள்ளி நகைத்தல் - கேலி செய்தல்

## ஒ

ஒடுங்கி - மெலிந்து, சோர்ந்து

## ஓ

ஓலம் - ஒலி, சத்தம்

## க

கதிரவன் - சூரியன்

கந்தை - கிழிசல்

கதிரொளி - சூரிய ஒளி

கர்மயோகி - செயல் வீரன்

கருமம் - செயல்

கவினழகு - அழகு, எழில்

## கா

காரணகர்த்தா - காரணக்மானவர்

## கு

குடியரசு -மக்களாட்சி

குதூகலம் - மகிழ்ச்சி

கும்பினியார் - ஆங்கிலக் கம்பெனியார்

**கூ**

கூச்சல் -பேரொலி

கூறுகூறாக - பகுதி பகுதியாக

**கே**

கேளிக்கை - உல்லாசம்

**கொ**

கொடுங்குதல் - குளிரால் ஒடுங்குதல்

கொடூரம் - கொடுமை

கொந்தல் - குளிர்

**கோ**

கோணிச்சாக்கு - கோணிப்பை

**கை**

கைதி - சிறைக்கைதி

**ச**

சடலங்கள் - பிணங்கள்

சதி - வஞ்சகம்

சமர்த்தாக - திறமையாக

சரண் - அபயம்

சர்வதேசம் - அகில உலகம்

**சா**

சாய்மானம் - சாய்ந்த நிலை

**சி**

சிதைத்தல் - குலைத்தல்

சிரமப்படுதல் - கஷ்டப்படுதல்

சினம் - கோபம்

**சீ**

சீமை -வெளிநாடு

சீர்வசை - பரிசுப் பொருட்கள்

சீற்றம் -கோபம்

## செ

செப்பனிடுதல் - சீர்மைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல்

## சே

சேவை -தொண்டு

சேனை -படை

## த

தவித்தல் - வருந்துதல்

தன்னார்வலர் - விரும்பித்தொண்டாற்றுபவர்

## து

துணுக்கு - சிறு செய்தி

துவம்சம் - அழித்தல்

## தோ

தோட்டா - வெடிகுண்டு

தோரணை - தோற்றம்

## ந

நங்கை - பெண்

நன்று - நல்லது

## நா

நாட்டம் - விருப்பம்

## நி

நிதி - செல்வம்

நிவாரணம் - உதவி

## நெ

நெகிழ்தல் - உள்ளம் உருகுதல்

## ப

பங்கம் - இழிவு

பட்டாளம் - படைவீரர்

பண்டம் - பொருள், உணவுப்பொருள்

பண்ணழகு - இசையழகு

பதக்கு - ஓர் அளவு

பவுசு - தற்பெருமை

பறங்கியர் - போர்த்துக்கீசியர்

பா

பா - பாடல்

பாதாளம் - கீழ் உலகம்

பாரபட்சம் - வேற்றுமை

பானம் - பானகம்

பி

பிரமுகர் - முக்கியமானவர்

பிராணி - உயிரினம்

பின்னணி - சூழல், பின்பக்கம்

பீ

பீறல் - தெறித்தல்

பூ

பூஞ்சிட்டு - பூந்தாது

பெ

பெருஞ்சுமை - பெரிய சுமை

பெருமிதம் - பெருமை

பே

பேணுதல் - பாதுகாத்தல்

பேதம் -வேறுபாடு

பேரியக்கம் - பெரும் அமைப்பு

ம

மதிநுட்பம் - அறிவுக்கூர்மை

மந்தை - கூட்டம்

மனமார - உளமார

மா

மாண்டு -இறந்து

மீ

மீன்சிப்பம் - மீன் கட்டு

மு

முரசு -பறை

முறையிடு - புகார் செய்

முனைதல் - முயற்சி செய்தல்

மே

மேம்பாடு - மேன்மையடையச் செய்தல்

யு

யுத்தக்களம் - போர்க்களம்

வ

வண்ணம் - நிறம்

வலிமை - சக்தி

வளப்பம் - செழிப்பு

வி

விகடம் - நகைச்சுவை

விடம் - விஷம்

விஞ்சுதல் - மிஞ்சுதல்

விருது - பரிசு

விழி - கண்

ஜ

ஜந்து - உயிரினம்